RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# கம்பராமாயணத்தில் வீடணன் வழி காணலாகும் தத்துவ மெய்ப்பொருள்

ம. வெங்கடலட்சுமி [அ, *] ச. குருஞானாம்பிகா [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43, தமிழ்நாடு, இந்தியா

# The Philosophy of Surrender through Vibhishana in the Kamba Ramayanam

**M. Venkatalakshmi [a, *], S. Gurugnanambika [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore – 43, Tamil Nadu, India

* Corresponding Author:
venkatalakshmimani57@gmail.com

**ABSTRACT**

The Kamba Ramayanam conveys the profound truth that there is no happiness greater than that which arises from living in accordance with dharma (virtue and righteousness) and that the ultimate fulfilment of happiness lies in eliminating evil and establishing righteousness. For this truth to be realized in the world, the incarnation of Rama as the Supreme Being (Paramatma) is presented as necessary. Through this divine incarnation, the philosophical principles of righteousness, devotion, and moral order are revealed to humanity. Vishnu, the preserver of the universe, assumes the incarnation of Rama to establish dharma and demonstrate that the power of destiny cannot ultimately be avoided or destroyed. Through the story of Rama, the Kamba Ramayanam emphasizes the significance of devotion (bhakti), righteousness (dharma), philosophical truth, and the triumph of moral order. These elements contribute to the prominence of Vaishnava philosophical thought within the epic. The character of Vibhishana occupies a significant position in this philosophical framework. Although born in the family of Ravana, Vibhishana chooses righteousness over familial loyalty when the latter conflicts with dharma. His decision to abandon Ravana and seek refuge in Rama represents a profound expression of surrender (śaraṇāgati), one of the central concepts of Vaishnava philosophy. Vibhishana's surrender demonstrates that true allegiance is ultimately owed to righteousness rather than to worldly relationships or power. Rama's acceptance of Vibhishana further embodies the principle that one who sincerely seeks refuge in the divine should be protected and accepted. Thus, the episode presents surrender not as weakness but as an ethical and spiritual act grounded in faith, righteousness, and moral discernment. This article examines the philosophical truth revealed through Vibhishana in the Kamba Ramayanam, with particular emphasis on dharma, devotion, destiny, and the philosophy of śaraṇāgati. The study seeks to demonstrate how Vibhishana's character and his surrender to Rama contribute to the epic's larger philosophical vision of the establishment of righteousness and the ultimate triumph of dharma over evil.

**Keywords:** Man of Righteousness, Lord of the Ocean, The Group of Seven, Kingship and the Crown, Surrender and Vaikuntha

## முன்னுரை

இராமாயணத்தின் சாராம்சமே சரணாகதி தத்துவத்தை உலகிற்கு எடுத்துரைப்பதாகும். இதில் முக்கிய பங்கேற்றுவது வீடணன் சரணாகதியாகும். இராவணன் இராமனை அளிக்க வேண்டும் என்ற கொடுஞ்செயலை மேற்கொள்ளவிருக்கின்றான் என்றறிந்தவுடன், இராவணனுக்கு பல அறிவுரைகளை வழங்குகின்றான். அதனால் கடும் கோபமுற்ற இராவணன் வீடணனை கடுஞ்சொற்களால்

புண்படுத்துகின்றான். ஆயினும், இராமனைச் சேர்வது மட்டுமே நற்செயல் நன்மை பயக்கும் வீடுபேற்றினை என்பதையுணர்ந்து வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுகின்றான் என்பதையும் இப்பகுதியில் இராமனிடம் வீடணன் நற்கதியடைந்த விதமும், இராமனின் கருணை மற்றும் பேரன்பு சகோதரத்துவமும் வெளிப்படுகின்றது. எனவே, இராமனின் சரணாகதித் தத்துவம் வீபிடணன் வாயிலாக எங்ஙனம் கம்பராமாயணம் வழி உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் பொருண்மையாக அமைகின்றது.

## நாலாயிர திவ்யப் பிரபந்தமும் விபீடணனும்

நாதமுனிகள் தொகுத்து வெளியிட்ட நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார் தன்னுடைய பாசுரத்தின் வாயிலாக இராமனை,

“வில்லானை செல்வ விபீடணற்கு வேறாக

நல்லானை நாடி நறையூரில் கண்டேனே” (நாலா.திவ் 1522; 3-4)

என்றும்,

“வல் ஆள்ஆகம் வில்லால் முனிந்த

எந்தை, விபீடணற்கு

நல்லானுடைய நாமம் சொல்லின்

நமோ நாராயணமே” (நாலா.திவ் 1541:5-8)

என்னும் பாசுரங்களில், விபீடணனுக்கு அன்பு செய்தவன் என்று குறிப்பிடுகின்றார். இதனையே கம்பரும் வீடணன் அடைக்கல படலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## வீடணன் அடைக்கலம்

இராவணனை விட்டு வந்த வீடணன் தன்னுடைய இரண்டு கரங்களையும் தலைக்கு மேல் குவித்து, "இராம அபயம்" என்று கூறி, இராமனின் சேனைகளை வணங்கினான். அதனைக் கண்ட இராமனின் சேனைத்தலைவர் இராவணனின் தம்பி ஒருவன் நம்மோடு இணைய விரும்புகிறான் என்று கூற, வானரங்கள் அனைவரும் அவன் மீது ஐயம் கொள்கின்றனர். ஆனால் அனுமன் இவனது மகளே திரிசடை என்பவள் என்றும், சீதாப்பிராட்டியின் தோழியாக அசோக வனத்தில் இருப்பவள் இவளே என்றும், அவளைப் போன்றே அவன் தந்தையும் தூயவனாக இருப்பான் என்றும், இவன் கொடியவனாக இருப்பினும் நம்மை எதிர்க்க இவனால் இயலாது என்றும் அனுமன் குறிப்பிடுகின்றான் என்பதை,

“அன்னவன் தனிமகள் அலரின் மேலயன்

சொன்னது ஓர் சாபம் உன்னைத் துன்மதி

நன்னுதல் தீண்டு மேல் நணுகும் கூற்று என

என்னுடைய இறைவிக்கும் இனிது கூறினாள்” (கம்ப.யுத்த.வீடணன்.403)

எனும் கம்பராமாயண பாடல் மூலம் அறிந்து கொள்ள இயலுகிறது.

அனுமன் கூறியதை கேட்ட இராமன் "சரணாகதி என்று யார் வந்தாலும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நேற்று ஏன் வரவில்லை என்று கேட்கக் கூடாது. இன்றையாவது வந்தானே என்று தான் பார்க்க வேண்டும் தனது அண்ணன் இராவணனின் பகைவன் ஆகிய என்னிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தால் அவன் என்னை தேடி வந்திருப்பான் என்று பார்க்க வேண்டும்" (அமுத இராமாயணமும் அருளாளர்களும்: ஸ்ரீராமப்பிரியன், S.சேகர், ப.194) என்று கூறினார். சரணடைந்தவர்களை ஏற்றுக் கொள்ளாத நாள், நான் இறந்த நாள் என்று கூறுகிறார் இராமன். இதனை,

“பிறந்தநாள் தொடங்கி யாரும் துலை புக்க பெரியோன் பெற்றி

மறந்த நாள் உண்டோ என்னைச் சரண் என வாழ்கின்றானே

துறந்த நாட்கின்று வந்து துன்னினான் சூழ்ச்சியாலே

இறந்த நாள் அன்றோ என்று இருந்த நாள் ஆவது என்றான்”

(கம்ப:யுத்த: வீடணன்.412)

எனும் பாடல் உணர்த்துகின்றது. இராமன் வீடணனை ஏற்றுக்கொண்டது தெரிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றான் வீடணன். இராமனை கண்ட வீடணன் ஆனந்தத்தால் கண்களில் நீர் சொரிந்தான். தன் தமையனான இராவணன் எனக்கு நன்மையே செய்துள்ளான் என்றும், இவனே தன் வில்லினை கொண்டு அம்பு செலுத்தி அரக்கர் கூட்டத்தினை அழிக்க இருப்பவன் என்றும், இராமன் கைகளால் இறப்பதற்கு அரக்கர் கூட்டம் அனைத்தும் தவம் செய்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுவதாகக் கம்பர் பாடியுள்ளமையை அறிந்து கொள்ள இயலுகிறது.

## வீடணனுக்கு அரசளித்தல்

இராமனை கண்டதால் தன்னுடைய துன்பங்கள் அனைத்தும் தீர்ந்தது, பிறவிப் பயனை அடைந்தேன் என்று வீடணன் மிகுந்த இன்பத்தை அடைந்தான். அச்சமயம் இராவணன், ஆட்சி செய்கின்ற நிலவுலகம் அனைத்தையும் வீடணனுக்கே கொடுப்பதாக இராமன் வாக்களித்தான். “பதினான்கு உலகங்களும் என் பெயரும் எவ்வளவு காலம் வரை இருக்குமோ அவ்வளவு காலம் வரையிலும் அரக்கர்கள் வாழ்கின்ற ஆழ்ந்த கடலின் நடுவில் இருக்கின்ற இலங்கை முழுவதையும் உனக்கே நான் தந்து விட்டேன்" என்று இராமன் கூறியதை,

“ஆழியான் அவனை நோக்கி அருள் சுரந்து உவகை கூற

ஏழினோடு ஏழாய் நின்ற உலகம் என் பெயரும் எந்நாள்

வாழும் நாள் அன்று காரும் வாள் எயிற்று அரக்கர் வைகும்

தாழ்கடல் இலங்கை செல்வம் நின்னதே தந்தேன் என்றான்”

(கம்ப:யுத்த: வீடணன் 444)

எனும் பாடல் அடிகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

வீடணனை இலங்கை அரசன் என்று கூறினால் மட்டும் போதாது என்றுணர்ந்து இலக்குவணனைக் கொண்டு, நம்மை அடைக்கலம் தேடி வந்த வீடணனுக்கு இலங்கை அரசன் என்று தெரிவிக்க, “திருமுடியை சூட்டுவாயாக” என்று கட்டளையிட்டான் இராமன். ஆனால் வீடணனோ “தாங்கள் பரதனுக்குச் சூட்டிய கால் பாதுகைகளையே எனக்கும் திருமுடியாகச் சூட்டுவீர்களாக” என்று வேண்டிக் கொண்டான். அதன்படியே இராமன் தன் காலில் உள்ள பாதுகைகளான செம்மொன் முடியை வீடணன் தலையில் சூட்டி மகிழ்ந்தான் என்றும், இதனைக் கண்ட ஏழு கடல்களும் மலைத்தொடர்களும் ஆரவாரம் செய்தன என்றும் கம்பர் கம்பராமாயணத்தின் வழி இராமனைப் புகழ்கின்றார்.

## எழுவரானோம் எனல்

இராமன் வீடணனின் சரணாகதியை ஏற்றுக்கொண்ட பின், தங்களுள் இப்பபோது தானும் இணைந்ததன் வாயிலாக ஏழுவர் ஆனோம் என்பதை,

“குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு பின் குன்று சூழ்வான்

மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த

அகன் அமர் காதில் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்

புகல் அருங் கானம் தந்த புதல்வரால் பொலிந்தால் நுந்கை” (கம்ப:யுத்த: வீடணன் 444)

எனும் பாடல் அடிகளில் கங்கை கரையில் குகனுடன் நாங்கள் நால்வர் இணைந்து ஐவர் ஆனோம், பின்பு சூரியனின் மகனான சுக்ரீவனுடன் இணைந்து அறுவரானோம என்றும்,; தற்போது உன்னுடன் நட்பு கொண்டு எழுவரானோம் என்றும் இராமன் தங்களின் உறவின் மேன்மையை எடுத்துக் கூறியதாகக் கம்பர் குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாக இராமனின் நட்புணர்வும் சகோதரத்துவமும் வெளிப்படுகின்றது. தன்னிடம் சரணடைந்தவன் பகைவனே ஆயினும் தன் மீது நம்பிக்கை கொண்டால் என்றும் நன்மையே அளிப்பான் இராமன் என்பதைக் கம்பராமாயணம் உணர்த்துகின்றது.

## முடிவுரை

சரணாகதி தத்துவத்தை பறைசாற்றும் கம்பராமாயணம், நம் முயற்சியால் எக்காரணமும் வெற்றியடைய முடியாது என்பதையுணர்ந்து, பெருமானே கதி என இறைவனின் மீது தன்னுடைய முழுமையான பாரத்தையும் சரணடையச் செய்து, தங்களுடைய கர்ம வினைகளுக்கு ஏற்ப வரும் எதிர்காலத்தினைக் கழித்து, இறைவனின் வைகுண்டத்தை அடைவதையே சரணாகதி என்பதை

நோக்கமாகக் கொண்டுள்ளது வைணவ சமயம் என்பதை கம்பராமாயணம் தெளிவுபடுத்துகிறது. சரணாகதி தத்துவத்தை, திருமால் தன்னுடைய மூன்று அவதாரங்கள் வாயிலாக உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளார். அத்தகைய மூன்று அவதாரங்களில,; உலக மக்களுக்கு நிலையாமையையும், கருணையும், பிற உயிர்களின் மீது காட்டும் பேரன்பினையும் பற்றி எடுத்துக்கூறி, மனிதனாகவே வாழ்ந்து மனிதனுக்கு உண்டான இன்ப துன்பங்களை அனுபவித்து, சரணாகதி தத்துவத்தை உலகிற்கு உணர்த்த திருமால் எடுத்த அவதாரமே இராம அவதாரம் என்பதை கம்பராமாயணம் உலகிற்கு உணர்த்துகிறது.

## References

கோபாலக் கிருஷ்ணமச்சாரியார் வை.மு, (2006) கம்பராமாயாணம், உமா பதிப்பகம், சென்னை.

புலவர் அமுதன் (2013) கம்பன் காட்டும் வைணவப் பேருலகம், கவிதா பப்ளிகேசன், தி.நகர், சென்னை

டாக்டர் அருட்கவி அரங்க சீனிவாசன் (1984) வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், பாரி புத்தகப் பண்ணை, சென்னை

சுவீரா ஜெயஸ்வால் (1991) வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

அருணாச்சலம், ப. (1982) வைணவ சமயம் ஓர் அறிமுகம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை

ஜகத்ரட்சகன் (1993) நாலாயிர திவ்ய பிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License